செ.கு.எண் : 241 நாள் : 06-07-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6 .7.2012

விருதுநகர் மாவட்டம், கூரைக்குண்டு கிராமத்திலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் 4.7.2012 அன்று சூரியகுமார் என்பவரது வீட்டின் பால்கனி சுவர் இடிந்து விழுந்ததில் திரு. அய்யாசாமி என்பவரது மனைவி திருமதி. திரிபுரசுந்தரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திருமதி. திரிபுரசுந்தரி குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் காலமான திருமதி.திரிபுரசுந்தரி குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9